# நிச்சயதார்த்தம்

எனைப்பிடிக்கிறதா....
உனைப்பிடிக்கிறதா...
என சம்பிரதாய விசாரிப்புக்குப் பின்தான்
நமது பிற்கால
உறவுக்கான நிச்சயம்
நிர்ணயிக்கப்படுகிறது....!

எனினும் அதே
வார்த்தைகளில் தொடங்குகிறது
நமது வாழ்க்கைக்கான
பிடிப்பும் அச்சாரமும்...!

அதே கேள்விகளின்
அடர்த்திகளில் தான்
நம்மை நாம் உணர்ந்து கொள்ள
சந்தர்ப்பங்கள் உருவாக்கப்படுகின்றன...!

உனைக் கோவிலில்
கண்ட கணம் நினைவிலில்லை...!
தரகர் கேட்கும் பொழுதும்
சொல்லத் தோன்றவில்லை...
ஒரு மாத இடைவேளையில்
நடந்த நிச்சயதார்த்தத்தில் தான்
நமது முகங்கள்
நமக்கு பரிச்சயம் ஆகின்றன...!

ஆனால் அன்றே உணர்ந்தேன்...
நம் சம்பிரதாயங்களின் வலிமையை...!
ஆம் ...
நீ எனக்கானவள் ...என்ற
நிச்சயத்தை என்னை
உணரச் செய்தவை அவை.
அறிவுறுத்தப்பட்டேன் நண்பர்களால்
மென்பொருள் பெண்கள்
மென்மையானவர்களல்லவென்று....!
பயம் தெளிந்த பின்னர் அறிந்தேன்...
நீயே ஒரு மென்பொருள் என்று...!

இன்னும் நாம் போக வேண்டிய
தூரம் பல இருப்பினும்
களைப்பும் மலைப்பும்
தோன்றவில்லை.....!
நமக்கான நமது சொந்தங்கள்
அதிகரிக்கும்போது....
இனியும் ஒரு மாதம்...
இருக்கிறது......நம் திருமணத்திற்கு ,
நாம் நமது அருகாமையை இருவரும்
எதிர் நோக்கியிருக்கிறோம்....!

--- பிரநேசம்.

pranesam@yahoo.com
http://pradeepnesam.tamilblogs.com